**O.S. No. : 97/2016**

Dated: 01.06.2026

**பி.வா.சா.1: சுப்பன்; த/பெ. ஜோகி கவுடர்**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

1. வாதி எனது உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். நான் முதல் விசாரணை சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் எனக்காகவும், 2 ஆம் பிரதிவாதிக்காகவும் சேர்த்துதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் 2 ஆம் பிரதிவாதியை சாட்சியாக விசாரிக்கப்போவதில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நானும், 2 ஆம் பிரதிவாதியும் தனித்தனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான்.

2. இந்த வழக்கு சொத்து தொடர்பாக எனக்கும், வாதிக்கும் எப்போது பிரச்சனை ஏற்பட்டது என்றால் வழக்கு சொத்து தொடர்பாக எங்களுக்குள் பிரச்சனை எதுவும் ஏற்படவில்லை, 2004 ஆம் ஆண்டு எனது பெற்றோர்கள் கேட்டுக்கொண்டதன் பெயரில் நான் சொந்தமாக கிரையம் பெற்ற பூமியில் 3 சென்ட் அளவில் வாதி வீடு கட்டிக்கொள்ள நான் அனுமதித்தேன், 2016–ல்தான் பிரச்சனை ஏற்பட்டது. தாவா சொத்து உள்ள சர்வே எண்ணில் எனது தாத்தா பெள்ளா கவுடர் என்பவருக்கு 41 ¼ சென்ட் பூமி பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

3. உல்லத்தி கிராமம் பழைய சர்வே எண் 104–ன் மொத்த விஸ்தீரணம் 3.72 ஏக்கர் என்றால் சரிதான். அதில் 20 சென்ட் பூமியைத்தான் மாதா கவுடர் என்பவர் நஞ்சன் என்பவருக்கு பி.வா.சா.ஆ.1 கிரையப்பத்திரம் மூலம் விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் மேற்படி விற்பனை செய்யப்பட்ட 20 சென்ட் பூமிக்கு செக்குபந்தி காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான், கூட்டு பட்டா என்பதால் செக்குபந்தி காண்பிக்கப்படவில்லை.

4. தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் மாதா கவுடருக்கு எவ்வாறு சொத்து பாத்தியப்பட்டது என்பது குறித்து எதுவும் கூறப்படவில்லை என்றால் சரிதான். நஞ்சன் என்பவர் எனக்கு 20 சென்ட் பூமியை விற்பனை செய்ததற்காக ஏற்படுத்தப்பட்ட பி.வா.சா.ஆ.2 கிரையப்பத்திரத்திலும் 20 சென்ட் பூமிக்கான செக்குபந்தி காட்டப்படவில்லை என்றும், மொத்த விஸ்தீரணம் 3.72 ஏக்கர் என்று காட்டப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரிதான்.

5. தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனக்கு 20 சென்ட் பூமியை விற்பனை செய்த நஞ்சன் என்பவருக்கு எவ்வாறு அந்த சொத்து பாத்தியப்பட்டது என்று சரத்து எதுவும் இல்லை என்றால் சரிதான். வாதி வீடு கட்டியுள்ள இடம் எனக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க ஏதாவது ஆவணங்களை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா மற்றும் சிட்டா தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு எந்தவிதமான பட்டா மற்றும் சிட்டா ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு பட்டா மற்றும் சிட்டாவை இந்த வழக்கில் தாக்கல் செய்யாமல் தற்போது தாக்கல் செய்துள்ளதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. நான் 2 ஆம் பிரதிவாதிக்கு 01.04.2016 தேதியில் 3 சென்ட் பூமியை கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு நான் 2 ஆம் பிரதிவாதிக்கு 3 சென்ட் பூமியை கிரையம் செய்து கொடுப்பதற்கு முன்பே வாதி 24.03.2016 தேதியில் தாவா சொத்தில் எனக்கு உரிமை எதுவும் இல்லை என்றும், அதனால் வாதியின் சுவாதீனத்தை எந்த வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என்று அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும் சொன்னால் ஞாபகம் இல்லை.

7. அந்த அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டதற்கு பிறகுதான் 2 ஆம் பிரதிவாதிக்கு 3 சென்ட் பூமியை கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு 2 ஆம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த பிறகு 05.05.2016 தேதியில் வாதி அனுப்பிய அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பில் நான் 2 ஆம் பிரதிவாதிக்கு சொத்தினை கிரையம் செய்து சுவாதீனத்தை ஒப்படைத்துவிட்டதாகவும், அதனால் மேற்படி சொத்திற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்று கூறியுள்ளேன் என்றும் சொன்னால் சரிதான்.

8. தற்போதும் எனக்கும், தாவா சொத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான், நான் எழுதிக்கொடுத்துவிட்டதால் எனக்கு சம்பந்தம் இல்லை. நான் தாவா சொத்திற்கு 270/6B என்ற எண்ணில் செய்த உட்பிரிவை ரத்து செய்யக்கோரி வாதி கொடுத்த புகாரானது அனுமதிக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான், அதன் பெயரில் மேல்முறையீடு செய்யப்பட்டு அந்த மேல்முறையீட்டில் DRO

நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் நீதிமன்றம் அது குறித்து முடிவு செய்யட்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

9. 13.02.2017 அன்று RDO உத்தரவு பிறப்பித்துள்ள தேதியிலிருந்து சர்வே எண் 270/6B என்ற உட்பிரிவு அற்றுப்போய்விட்டது என்றால் சரியல்ல, மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் மேல்முறையீட்டு மனுவை 09.03.2017 அன்று தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அதில் DRO வா.சா.ஆ.6 ஆவண உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றும், அந்த உத்தரவில் நான் நீதிமன்றத்தை அணுகி நிவாரணம் பெற்றுக்கொள்ள கூறப்பட்டுள்ளது என்றால் ஏற்கனவே வழக்கு உள்ளதால் அந்த வழக்கில் நிவாரணம் பெற்றுக்கொள்ள உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நான் இன்றைய தேதிவரை உட்பிரிவை ரத்து செய்தததை எதிர்த்து உரிமையியல் வழக்கோ, மேல்முறையீடோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஏற்கனவே இந்த வழக்கு நிலுவையில் உள்ளதால் வழக்கு தாக்கல் செய்யவில்லை.

10. இந்த வழக்கு உட்பிரிவு செய்யப்பட்டது தொடர்பானதல்ல என்றும், 2 ஆம் பிரதிவாதி அத்துமீறி ஏற்படுத்திய கட்டுமானத்தை அகற்ற வேண்டிதான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, 2 ஆம் பிரதிவாதி அத்துமீறி கட்டவில்லை. நான் 3 சென்ட் பூமியை 2 ஆம் பிரதிவாதிக்கு விற்பனை செய்வதற்கு முன்பே வாதி அந்த பூமியில் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்துள்ளார் என்றால் சரியல்ல, வாதி நான் விற்பனை செய்ததற்கு பின்புதான் ஆழ்துளை குழாய் கிணறு அமைத்தார்.

11. நான் மற்றும் வாதி மேற்படி பிரச்சனை தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அது தொடர்பாக விசாரணை செய்யப்பட்டது என்றால் நான் புகார் கொடுக்கவில்லை, என்னிடம் சொத்தினை கிரையம் பெற்ற நபர்தான் புகார் கொடுத்துள்ளார். 20.03.2016 தேதியில் காவல் ஆய்வாளரிடம் நான் எழுத்து மூலமாக நான் வெளியூர் சென்றிருந்த சமயத்தில் வாதி ரவீந்தரன் என்பவர் தாவா சொத்தில் அத்துமீறி ஆழ்துளை குழாய் கிணறு மற்றும் நடைபாதை அமைத்துள்ளதாக எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

12. நான் எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் பத்தி–11–ல் 2 ஆம் பிரதிவாதியுடன் 2013 ஆம் ஆண்டு விற்பனை உடன்படிக்கை

ஏற்படுத்தியதாக கூறியுள்ள நிலையில் அந்த விற்பனை உடன்படிக்கையை இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

13. 2 ஆம் பிரதிவாதி வாதியின் மீது 24.08.2016 தேதியில் ஒரு புகார் கொடுத்து அதன் பெயரில் குற்ற எண்.173/2016–ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புகாரில் 2 ஆம் பிரதிவாதி 24.08.2016 தேதியில் தான் தாவா சொத்தில் கட்டுமானப்பணி ஆரம்பிக்க சென்றபோது வாதி ரவீந்தரன் தனது அனுமதியின்றி தாவா சொத்தில் அத்துமீறி சுற்றுச்சுவரும், ஆழ்துளை குழாய் கிணறும் அமைத்துள்ளதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு உள்ள நிலையில் நான் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் பத்தி–11–ல் 2016 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் 2 ஆம் பிரதிவாதி தாவா சொத்தில் 75 சதவீதம் கட்டுமானப்பணிகளை முடித்துவிட்டதாக கூறியுள்ளது உண்மையல்ல என்றால் சரியல்ல, உண்மைதான்.

**(வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).**

LOGANATHAN PRAKASH

Digitally signed by LOGANATHAN PRAKASH
Date: 2026.06.01 17:53:07 +0530